தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, ஒன்றிய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தலைமையில், ஒன்றிய நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் அஜய் தம்தா, ஒன்றிய தகவல் ஒலிபரப்புத் துறை மற்றும் மீன்வளம், கால்நடை பால்வளத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் முன்னிலையில், புதுதில்லியில் 30.09.2024 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு, தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கி, உரையாற்றினார். இந்த ஆய்வுக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் மு.பன்னீர்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் – நெடுஞ்சாலை ஆணையப் பணிகளின் முன்னேற்றம்!

புதுடெல்லியில் ஆய்வுக் கூட்டம்: அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி தலைமை!

புதுடெல்லி, அக்.2

தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, ஒன்றிய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின்கட்கரி தலைமையில் புதுடெல்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கு பெற்று ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலை பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, ஒன்றிய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின்கட்கரி தலைமையில், ஒன்றிய நெடுஞ்சாலைகள் துறை இணை அமைச்சர் அஜய் தம்தா, ஒன்றிய தகவல் ஒலிபரப்புத்துறை மற்றும் மீன்வளம், கால்நடைபால்வளத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் முன்னிலையில், புதுடெல்லியில் 30.09.2024 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பங்குப்பெற்று, தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சுங்கச்சாவடிகளில் கட்டண விலக்களிப்பது மற்றும் தமிழ்நாட்டிற்கு தேவையான புதிய திட்டப் பணிகளான;

1. கிளாம்பாக்கம் முதல் செங்கல்பட்டு வரை மற்றும் மதுரவாயல் முதல் சென்னை வெளிவட்டச் சாலை வரை உயர்மட்டச் சாலை அமைத்தல்.

2. செங்கல்பட்டு முதல் உளுந்தூர்பேட்டை வரை, எட்டு (8) வழித்தடமாக தரம் உயர்த்துதல்.

3. திருவாரூர் புறவழிச் சாலை அமைத்தல்.

4. கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை, நான்கு வழித்தடமாக மேம்படுத்துதல்.

5. விக்கிரவாண்டி - கும்பகோணம் - தஞ்சாவூர் நான்கு வழித்தடமாக்கும் பணியினை விரைவு படுத்துதல்.

6. திருவாரூர் இரயில்வே மேம்பாலம் மறுகட்டுமானம் செய்தல்.

7. திருவண்ணாமலை மற்றும் பல்லடம் புறவழிச் சாலை அமைத்தல்.

8. வள்ளியூர் - திருச்செந்தூர் சாலை, கொள்ளேகால் - ஹானூர் சாலை, மேட்டுப்பாளையம் - பவானி சாலை, பவானி - கரூர் சாலை ஆகிய நான்கு சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துதல்.

9. திருச்சி (பால் பண்ணை) முதல் துவாக்குடி வரை சாலையை மேம்படுத்துதல்.

10. கோயம்புத்தூர் புறவழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக மேம்படுத்துதல்.

11. தாம்பரம் - மதுரவாயல் - மாதவரம் புறவழிச் சாலையில் (சென்னை புறவழிச்சாலை) விடுபட்ட இணைப்புகள் / வசதிகளை வழங்குதல்.

ஆகிய தேசிய நெடுஞ்சாலை பணிகளை வழங்கிட கோரிக்கைகளை அளித்து வலியுறுத்தினார். தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளின் முன்னேற்றத்திற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஒத்துழைப்பு குறித்து உரையாற்றினார்.

தொடக்கத்தில், 13.09.2024 அன்று திருச்சிக்கு வருகை தந்த ஒன்றிய அமைச்சருக்கு, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் மூலம் இந்திய அரசின் நிதியுதவியுடன் சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முதலிடத்தில் உள்ளது என்று பாராட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ஒன்றிய அமைச்சர், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளை பாராட்டியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், ஒன்றிய அமைச்சர், சில திட்டங்களில் நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் திட்டங்கள் முடிக்கப்படுவதில் தாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட மாநிலத்தில் செயல்படுத்தப்படும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் தொடர்பான இடர்பாடுகள் குறித்து, சம்பந்தப்பட்ட துறைகளுடன் விரிவான ஆய்வுக் கூட்டத்தை நடத்துமாறு, தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தியதால், அவருடைய வழிகாட்டுதலின்படி, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் தொடர்புடைய ராணுவம், வருவாய்த்துறை, தமிழ்நாடு மின்சாரவாரியம் (TNEB), நீர்வளத்துறை (WRD), வனத்துறை (Forest), மாவட்ட ஆட்சியர்கள், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) / தேசிய நெடுஞ்சாலை(NH) அதிகாரிகளுடன் 23.09.2024 அன்று சென்னை தலைமைச் செயலக பழைய கூட்டரங்கில் (Old Conference Hall) ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, சில இடர்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மேலும், இக்கூட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைத்துறைத் திட்டங்களில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதற்கும், தமிழ்நாட்டின் உள்கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் நடைபெறும் NHAI மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள் அனைத்தும் தொடர் கூட்டங்கள் நடத்தி இடர்ப்பாடுகளை சரிசெய்து பணிகள் விரைவாக நடைபெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

அமைச்சர் எ.வவேலுவின் உரையை தொடர்ந்து, ஒன்றிய நெடுஞ்சாலை மற்றும் போக்கு வரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி அனைத்து திட்டங்களையும், ஒன்றன்பின் ஒன்றாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சார்பாக, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத்துறை ஆணையாளர் சுஞ்சோங்கம் ஜாதக், சிறு, தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை தனி அலுவலர் (டெக்னிக்கல்) இரா.சந்திரசேகர், தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் மு.பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (01.10.2024) சென்னை, கிண்டி, தேசிய முதியோர் மருத்துவ மையத்தில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் 36 அரசு மருத்துவக்கல்லூரிகளில் 975 இடங்கள் கொண்ட முதியோர் பராமரிப்பு உதவியாளர் சான்றிதழ் பயிற்சி வகுப்பு தொடக்க விழாவில் மாணவர்களுக்கு சேர்க்கை ஆணையினை வழங்கினார்கள். இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், தேசிய முதியோர் மருத்துவ மைய இயக்குநர் மரு.தீபா, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, திரு.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.10.2024) சென்னை நுங்கம்பாக்கம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டரங்கில் டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் பெயரில் அமைக்கப்பட்டுள்ள பார்வையாளர் மாடத்தை (Vijay Amritraj Pavilion) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, கார்த்தி சிதம்பரம், டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, டென்னிஸ் சங்க செயலாளர் பா.வெங்கடேஷ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை நடத்தும்

இளையோர் இலக்கிய பயிற்சிப் பாசறை!

கவிஞர் நெல்லை ஜெயந்தா முன்னின்று நடத்துகிறார்!

சென்னை, அக். 2-

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை நிகழ்த்தும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை கல்லூரி மாணவ மனைவியர்களுக்கு இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசு தொடங்கியிருக்கும் திட்டம் தான் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை திட்டம் .

தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலும் , மாவட்டத்திற்கு ஒரு கல்லூரியில் நடைபெறும் இப்பாசறையில் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளில் இருந்தும் மாணவர்கள் அழைக்கப்படுவர் மொத்தம் 100 மாணவர்கள் பார்வையாளர்களாக பங்கேற்பர். சென்ற நிதி ஆண்டில் 38 மாவட்டங்களிலும் இத்திட்டம் சிறப்பாக நடந்தேறியது காலை 10 மணி முதல் 11 மணிவரை தொடக்க விழா. 11 மணி முதல் மாலை 3.40 முடிய 6 வகுப்புகள் (இடையில் தேநீர் இடைவேளை உணவு இடைவேளை உண்டு) 3.40 to 4.00 பங்கேற்பாளர்களுக்கு சான்று வழங்கும் நிறைவு விழா. நடைபெறும் 100 மாணவர்களுக்கு காலை தேநீர் மதிய உணவு மாலை தேநீர் போன்றவையும் பாசறையில் பேசும் பேச்சாளர்களுக்கான மதிப்பூதியமும் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்படும் கல்லூரியின் பங்களிப்பு என்பது தகுந்த ஒலி ஒளி அமைப்புடன் 100 மாணவர்கள் அமரக் கூடிய அரங்கம் ஒன்றினை அழித்து உதவுவதுதான் பங்கேற்கும் மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் குறிப்பேடு ஒன்றையும் பேனா ஒன்றையும் மாலை சான்றிதழ் ஒன்றையும் தமிழ் வளர்ச்சி துறை வழங்கும்

தமிழின் அருமை தமிழர் பெருமை, மனம் மனம் அறிய ஆவல், கை நிறைய கவிதைகள், உணவுகளும் கனவுகளும், ஊடகத் தமிழ், உச்சம் தொட்ட தமிழர் என்ற தலைப்பில் அறிஞர்கள், பேராசிரியர்கள் ஒவ்வொருவரும் 30 நிமிடங்கள் உரையாற்றுவார்கள் .

வரும் அக்டோபர் ஒன்றாம் தேதிஅன்று சென்னை ராணி மேரி கல்லூரியில் கல்லூரியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் முன்னிலையில் இப்பாசறையை துவக்கி வைக்கிறார் . கல்லூரி கல்வி இயக்ககத்தின் மண்டல இயக்குனர் திருமதி சுடர் கொடி அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்கள். இப்பாசறையை சிறப்பாக நடத்திடும் நோக்கில் பாசறையின்மாநில ஒருங்கிணைப்பு அலுவலராக பொதுப்பணித்துறையில் பணியாற்றி சென்ற ஆண்டு ஓய்வு பெற்ற பொறியாளரும் முத்தமிழறிஞரால் சிவிகையில் வைத்து சிறப்பு செய்யப்படவேண்டிய கவிஞர் என்று பாராட்டப்பெற்ற புகழ்மிக்க கவிஞர் நெல்லை ஜெயந்தா தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆதிதிராவிடர் நலக்குழு சென்னை மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருவள்ளூர், அக்.2:

திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின் பேரில் ஆதிதிராவிடர் நலக்குழு சென்னை மண்டல மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆய்வு கூட்டம் திருவள்ளூர், காக்களூர் குரு காம்ப்ளக்ஸ் லட்சுமி மஹாலில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும் பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ.வுமான ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். மாநில துணைச் செயலாளர் ச.தசரதன் முன்னிலை வகித்தார். திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் விமல் ஆனந்த் அனைவரையும் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பார்க்கத்துல்லா கான், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்களான சென்னை வடக்கு வெ. அன்பரசன்,

சென்னை வடகிழக்கு சி.ஏழுமலை, சென்னை கிழக்கு எல்.பி எப்.மோகன், சென்னை மேற்கு இ.இளம்பரிதி, சென்னை தென்மேற்கு புலியூர் டி.மோசஸ், சென்னை தெற்கு சி சுரேஷ், திருவள்ளூர் கிழக்கு கா.சம்பத், திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஏ.விமல் ஆன்ந்த், திருவள்ளூர் மேற்கு சிலம்பு பன்னீர்செல்வம், காஞ்சிபுரம் வடக்கு தி.க.பாஸ்கரன், காஞ்சிபுரம் தெற்கு வி.புருஷோத்தமன்,

ராணிப்பேட்டை சி.சக்திவேல்குமார், வேலூர் ஜெ.திவாகர், மற்றும் காஞ்சிபுரம் மாநகரம் மோகன் ஆவடி மாநகரம் தண்டுரை கோபி, தாம்பரம் மாநகரம் நடராஜன் மற்றும் துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சமத்துவமும், சகோதரத்துவமும் இந்த மண்ணில் தழைக்கட்டும் !
வெறுப்புணர்வைத் தூண்டும் சக்திகளுக்கு இங்கு என்றும் இடமில்லை !
இது காந்திய மண் எனச் சூளுரைப்போம் !

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

உத்தமர் காந்தியடிகள் அவர்களின்
156ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
உத்தமர் காந்தியடிகள் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

நாள் : 2.10.2024, புதன்கிழமை, காலை 9.30 மணி
இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை - 600 009

செ.ம.தொ.இ/1008/வரைகலை/2024